**கொகுவல மற்றும் கடம்பே மேம்பாலங்கள் செயற்திட்டம் - 2022**

---

கொகுவல மற்றும் கடம்பே மேம்பாலங்கள் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், அப்போதைய பெருந்தெருக்கள் அமைச்சாகிய தற்போதைய போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற்திட்டத்தின் அமுலாக்கம் முகவராக உள்ளது. கொழும்பு மாவட்டத்திலுள்ள கொகுவலயிலும் கண்டி மாட்டத்திலுள்ள கடம்பேயிலும் அமையப்பெறவுள்ள திட்டமிட்ட மேம்பாலங்களை வடிவமைத்தலும் நிர்மாணித்தலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது கொகுவல மேம்பாலம் மற்றும் கடம்பே மேம்பாலம் ஆகிய 02 வேலைத் தளங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயமானது ரூபா 11,167 மில்லியனுக்குச் சமனான யூரோ 54.974 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 10,192 மில்லியனுக்குச் சமமான யூரோ 52 மில்லியன் ஹங்கேரியன் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 975 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதியில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 பெப்ரவரி 15 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு அவதானிப்புக்கய் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 43 (அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதிநிலைமைக் கூற்றுக்கான சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் இறுதியில் வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் பரிமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். எனினும் செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடன் தொடர்பான ரூபா 2,044 மில்லியன் தொகையான சமப்படுத்தல் செம்மையாக்கலானது மேற்கூறிய வேண்டுதல்களுக்கு இணங்கமீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2,044 | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கூற்றுக்களுக்கு இணங்க ரூபா 172.65 மில்லியன் தொகையான வெளிநாட்டு நாணயமாற்று விகித வித்தியாசங்கள் பதிவு செய்யப்பட்டன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும் |
| (ஆ) | இச்செயற்திட்டத்தினை உள்ளடக்கிய ஏழு செயற்திட்டங்கள் நானாவித வெளிநாட்டு நிதியளித்த செயற்திட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன. எனினும் பொதுவான மேந்தலை செலவுகளை செயற்திட்டங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு ஒரு கொள்கை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே மீளாய்வாண்டின் போது ரூபா 12.24 மில்லியன் தொகையான மொத்த கட்டிட வாடகையில் ரூபா 4 மில்லியனை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. | 04 | பெற்றுக்கொள்ளக்கூடிய கட்டுநிதி மற்றும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் தொகை அறவிடப்படுகின்றது. | சரியான செலவுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

| கூறு | நடவடிக்கை | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றம் | அடைந்துகொள்ளப்பட்ட செலாற்றல் | தாமதம் | தாமதத்திற்கான காரணம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| கடம்பே மேம்பாலம் | நிர்மாணம் | 78 | 36 | தாமதம் | காணியை பெற்றுக்கொள்ளும் நடைமுறையிலுள்ள தாமதமும் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தாமையும் நிர்மாணத்தின் குறைவான செயல்முன்னேற்றத்திற்குத் தாக்கமளித்திருந்தது. | IPCC செயற்திட்டங்களுக்கு பணம் செலுத்தப்படாமையின் காரணமாக திட்டமிட்டவாறு பூர்த்தியாக்கலினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | செயற்திட்ட செயற்பாடுகளை துரிதப்படுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வரிசை அமைச்சினால் 2018 இல் நடாத்தப்பட்ட தொடக்க ஆய்விற்கு இணங்க கொகுவல மற்றும் கடம்பேயில் மேம்பாலத்தை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஒரு நாளைக்கு ரூபா 4.26 மில்லியன் செலவு சேமிக்கப்படும் என அடையாளம் காணப்பட்டிருந்தது. எனினும் நிர்மாண வேலைகளைத் தாமதிப்பதானது செயற்திட்ட விளைவுகளில் தாமதத்தை ஏற்படுத்தலாம் என அவதானிக்கப்பட்டது. | IPCC செயற்திட்டங்களுக்கு பணம் செலுத்தப்படாமையின் காரணமாக திட்டமிட்டவாறு பூர்த்தியாக்கலினை அடைந்துகொள்ள முடியவில்லை. | செயற்திட்ட விளைவுகளை அடைந்துகொள்வதற்காக செயற்திட்ட செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு நன்கொடையளிக்கும் முகவராண்மைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 1629 மில்லியன் தொகையான 07 இடைக்கால கொடுப்பனவு கோரிக்கைகள் (IPC) மீளாய்வாண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் முகவராண்மை அத்தொகையினை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தியிருக்கவில்லை. | சர்வதேச நாணய நிதிய கடன் மீளமைத்தலின் காரணமாக ஹங்கேரியன் எக்ஸிம் வங்கி பணம் வழங்குவதனை நிறுத்தியுள்ளது. 2022 ஏப்பரல் மாத்திலிருந்து அனைத்து நிலுவைக் கொடுப்பனவுகளும் இன்னும் செலுத்தப்படவில்லை. | மேலதிக செலவு ஏற்படாது கடன் பணத்தை வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | பாமன்கடவிலிருந்து கொகுவல வரையான வீதியினை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் தேசிய பெருந்தெருக்கள் துறை செயற்த்திட்டத்தினால் (NHSP) 88 காணித்துண்டுகள் வாங்கப்பட்டிருந்ததுடன் அக்காணித்துண்டுகளானது இச்செயற்திட்டத்தின் கீழ் கொகுவல மேம்பாலத்தினை நிர்மாணிப்பதற்கு இக்காணிகள் வேண்டப்பட்டிருந்தன. எனினும் இச்செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டில் தொடங்கும் வரை வாங்கிய காணிக்கான இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே இச்செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னைய காலப்பகுதிக்காக 50 காணிச் சொந்தக்காரர்களுக்கு ரூபா 145.47 மில்லியன் தொகையான இழப்பீடும் வட்டியும் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் அவ்வாறான கொடுப்பனவுக்காக வரிசை அமைச்சின் அங்கீகாரமானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே இது கணக்காய்விற்கு பிரச்சினையான ஒரு அம்சமாகும். | கொகுவல மேம்பால நிரமாணிப்பு தொடங்கியுள்ளதுடன் கொகுவல மேம்பால செயற்திட்ட பிரதேசத்திற்குள் வாங்கிய காணிகள் MFAP செயற்திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே அண்ணளவாக ரூபா 145.47 மில்லியன் தொகையான இழப்பீடு காணிச் சொந்தக்காரருக்குச் செலுத்த வேண்டியுள்ளது. | ஏனைய செயற்திட்டங்களுக்கு இழப்பீட்டினையும் வட்டியையும் செலுத்துவதற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மற்றைய இரண்டு செயற்திட்டங்களிலிருந்து ரூபா 14.65 மில்லியன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் இச்செயற்திட்டத்தின் வாங்கிய காணிகளுக்காக இழப்பீடும் வட்டியும் செலுத்தப்பட்டது. எனினும் அந்த நிதியை மாற்றுவதற்கு வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியிடமிருந்தும் எழுத்துமூல அங்கீகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் ஏனைய செயற்திட்டங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிதாக தொடங்கிய செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் ஒரு வங்கி கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. அத்துடன் தொடக்க செலவுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. ஆகவே இலங்கை அரசாங்க கூறின் கீழ் போதியளவு கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் செலுத்த வேண்டியவைகள் தீர்த்துவைக்கப்படும். | செலுத்த வேண்டியவைகளை தீர்த்துவைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |